# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,378 — 1938 ம் ஸ்ரீ ஆடிமீ 1 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரையைப்
பற்றிய சட்டம்.

1938 ம் ஆண்டு சந்தான நாயகியின், ஆடி திருவிழாவுக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதி யவர்கள் 1931 ம் ஆண்டின் இலங்கைச் (இராச்சிய மந்திரசபை) சபையின் கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 1 ம் பிரிவின் பிரகாரம் செய்த பிரமாணங்கள்.

டி. பி. ஜயதிலக,
சுயகாரிய மந்திரி.

சுயகாரிய மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1938 ம் ஸ்ரீ ஆனிமீ 6 ந் உ.

மேற்குறித்த ஒழுக்கவிதிகள்.

1. இந்த விதிகளில் "வாடியின் இடப்பரப்பு என்ற வசனம் கீழே கூறப்படும் டாப்பில் விவரித்திருக்கும் எல்லைகளுக்குள் ளடங்கிய விசாலத்தைக் கருதும்."

"உதவி அரசாட்சி ஏசன்றர்" என்பது புத்தளஞ் சிலாபம் டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசன்றரைக் குறிக்கும்.

2. உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளையின்படி வாடி வீடு கட்டக்கூடாதென்று விலக்கி வைக்கப்பட்ட வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள எந்த இடத்திலும் ஒருவ்ரும் வாடிவீடு கட்டப்படாது.

3. உதவி அரசாட்சி ஏசன்றரினால் அல்லது அவரின் அனுமதியுடன் அதற்காக அமைக்கப்பட்ட இடங்களிற் தவிர வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறு இடங்களில் ஒருவரும் மலஞ்சலங் கழிக்கப்படாது.

4. உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது அவரின் அனுமதியுடன் குப்பை போடுவதற்காக அமைத்து வைக்கப்பட்ட இடத்தில் அல்லது பாத்திரத்தில் ஒழிய, வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறொரு இடத்திலும் ஒருவரும் தண்ணீர்ப் பதார்த்தமான அல்லது கட்டிப் பதார்த்தமான கழிவு எதையும் அல்லது வேறெவ்விதமான குப்பையையும் போடப்படாது.

5. (a) அடிக்கப்படும்படி அங்கே கொண்டுவரப்பட்டவைகளும் உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளைப்படி அவ்விடப்பரப்புக்குள் வைத்துக்கொள்ள இடங் கொடுக்கப்பட்டவைகளுமான ஆடு மாடுகளைத் தவிர வேறு ஆடு மாடுகளை வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவரும் வைத்திருக்கப்படாது.

(b) உதவி அரசாட்சி ஏசன்றரால் ஒரு மாட்டுக்காலையாக விசேஷமாய் நியமிக்கப்பட்ட அல்லது அப்படிப் பாவிக்கலாமென்று உத்தரவு கொடுக்கப்பட்ட ஓர் இடத்திற் தவிர மற்றப்படிக்கு வாடியின் இடப்பரப்பின் சமீபத்தில் ஆடு மாடுகளை வைத்திருக்கப்படாது.

(c) அவ்வாடுமாடுகளைத் தன பொறுப்பில் வைத்திருப்பவன் சாணம் முதலியவற்றை அதற்கென்று நியமிக்கப்பட்ட அதிசமீபத்திலுள்ள இடத்தில் போடுவிக்க வேண்டும். மேலும் அவன் தன்னுடைய ஆடு மாடுகள் நிற்குமிடத்தை எப்பொழுதுந் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

6. வாடியின் இடப்பரப்புக்குள் விற்கப்படும் எல்லாவிதச் சாப்பாடுகளும் ஈ இலையான் விழாமலும் தூசி படியாமலும் இருக்கும்படி (a) சுத்தமான கடுதாசியால் அல்லது சீலையால் மூடிவைக்கப்படல் வேண்டும் அல்லது (b) கண்ணாடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்படல் வேண்டும் அல்லது (c) வைத்திய உத்தியோகஸ்தரால் அல்லது வாடிவீட்டு இடப்பரப்பின் பொறுப்பேற்றிருக்கும் சுகாதார உத்தியோகஸ்தரால அனுமதிக்கப்பட்ட வேறு எவ்விதமான மூடிப்பெட்டிகளுக்குள்ளும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

7. வாடியின் இடப்பரப்பின் சுத்தத்துக்குக் கேடு வருவிக்கத்தக்க ஆட்களுக்கும், தொத்துவியாதியுள்ள ஆட்களுக்கும் வாடியின் இடப்பரப்புக்குட் போகிறதற்கு உத்தரவு கொடுக்கப்படாது.

8. வாடியின் இடப்பரப்புக்குள் திருவிழா நாட்களில் ஏதுங் கொள்ளை நோய் உண்டாகக் கண்டால், உதவி அரசாட்சி ஏசன்றர், ஸ்தல யாத்திரைக்காரரை, யாத்திரை ஸ்தலத்தை விட்டுப் போகும்படி செய்தும், அவர்கள் அங்கிருந்து எப்பாதைகளாலும் எவ்விதமாயும் போகவேண்டுமென்றும் விதிக்கலாம்.

9. (a) வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் தொத்து வியாதியுள்ள ஒவ்வொருவனும் அல்லது (b) அப்படிப்பட்ட வியாதியால் வருந்துகிறவனுடன் அவனுக்கு அவ்வியாதி உண்டெனஅறிந்துகொண்டு வசிக்கிற ஒவ்வொருவனும் அந்தச் சங்கதியை டாக்குத்தருக்கு அல்லது சுகாதார உத்தியோகஸ்தருக்கு அறிவிக்க வேண்டும்.

10. வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள ஒரு குளத்தை அல்லது கிணற்றை ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்துக்கென்று புறம்பாக வைத்து அதைக்குறித்து ஒரு விளம்பரம் அவ்விடத்தில் வெளியாக வைக்கப்பட்டிருந்தால் அக்குளத்தை அல்லது அக்கிணற்றை அது புறம்பாக வைக்கப்பட்ட நோக்கத்துக்கே அன்றி வேறெந்த நோக்கத்துக்கேனும் ஒருவரும் உபயோகிக்கப்படாது.

11. உதவி அரசாட்சி ஏசண்டரிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் எற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் பாண் போறணை, சோடாமோள், கோப்பி தேநீர் கடைகள், சாப்பாட்டுக் கடைகள், அல்லது காலைகள் வாடியின் இடப்பரப்புக்குள் வைக்கப்படாது. அவ் லைசென்ஸ் செலவின்றிக் கொடுக்கப்படும்.

12. உதவி அரசாட்சி ஏஜன்றிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் கொட்டில் கட்டவும், வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் பிரதான அல்லது மற்றைய தெருக்களின் எல்லைக்குட் செல்லக்கூடியதாய் எக்கட்டடத்தைப் பெருப்பிக்கவும் படாது.

13. உதவி அரசாட்சி ஏஜன்றிடமிருந்து ஏற்கனவே அனுமதிச்சீட்டு அல்லது லைசென்ஸ் பெறாமல் ஒருவராகிலும் வாடியின் இடப்பரப்புக்குள் அல்லது அவ்விடப்பரப்பின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள இடத்துக்குள் எவ்வித துப்பாக்கி சுடவேனும் வாணங்கள் விட வேனும் படாது.

14. உதவி அரசாட்சி ஏஜன்றின் அனுமதியுடன் அமைத்திருக்கும் இடத்தில் தவிர வேறு ஒரு இடத்திலும் வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவராகிலும் ஆடுமாடுகள் அடிக்கப்படாது. அப்படி அமைத்திருக்குமிடங்களில் ஆடு மாடு அடிப்போர் அவ்விடத்தைத் துப்பரவாய் வைத்திருக்க உத்தரவாதமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

இடாப்பு.

தலைவில்லுவாடி இடப்பரப்பின் எல்லைகள் :—

வடக்கு : தலைவில்லு ஓடை ;

தெற்கு : எத்தாலை தலைவில்லும், தேலிக்குடா தலைவில்லும் அடிப் பாதைகள் எறும்புக்குடலில் வந்துசேருஞ் சந்தியிலிருந்து நேர்மேற்குப் புறம்பாகக் கடலுக்குபோகும் அடிப்பாதை ;

கிழக்கு : பண்டாரம் கருக்குவச்சான் பெரிய தோட்டம் வழிகள் ;

மேற்கு : கடல்.

எத்தாளைவாடி இடப்பரப்பின் எல்லைகள் :—

வடக்கு : தேறிக்குடாவிலிருந்து நேர்மேற்குப் புறமாய் மணல் அணைக் குப்போகும் அடிப்பாதை ;

கிழக்கு : சிறு கடல் ;

தெற்கு : சுருவிஅணை ;

மேற்கு : மணல் அணை.

## காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நொம்பர் 1,815 (கேகாலை).

இதனுடனைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சொந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1938 ம் ஷூ (ஜூலை) ஆடிமீ 1 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் நிலைவிற வகையாக ... ருந் தோனும் அறியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதனை நிர்ணயத்திற செய்யவேண்டியதாசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

1938 ம் ஷூ (மே) வைகாசிமீ 18 ந் தேதியினன்று கேகாலை கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். அலுவிஹாரே,
உதவி அரசாட்சி ஏஜன்ட்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரத்தைக் கேகாலை உதவி அரசாட்சி ஏஜன்று அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணி ஜெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமெனபதை அறிந்துகொள்க.

அட்டவணை.

சப்பிரகாமு மாகாணம், கேகாலை டிஸ்திறிக், பெலிகல் கோறளை, ஒதறப்பற்று மங்கெடற கிராமத்திலிருக்கும் துண்டுக் காணிகளாவன :—

பிரதமபடம் நம்பர் A 175.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | டிபவெற்றெனகலேபலகல .. .. | 0 2 39 |
| 2 | ஷெ .. .. .. | 1 1 11 |
| | | 2 0 10 |

எல்லைகளாவன : வடக்கு-கே. கிரிபண்டா உரித்தாடும் ஓவிறறேவத்த ; கிழக்கு-ஆர். எஸ. எம். மடுமபண்டா உரித்தாடும் ஓவிற்றேவற்ற, ஆர். ஆறேலிஸ் சிங்கோவும் மற்றவர்களும் உரித்தாடும் வல்லகொல்லே ஹேனவும் ஆர். எஸ். எம். மடுமபண்டா உரித்தாடும் தலகஹமுலஹேனவும் ; தெற்கு-ஆர். எஸ். எம். மடுமபண்டா உரித்தாடும் கடுருகஹமுல ஹேனவும் எஸ். அப்புவாவும் மற்றவர்களும் உரித்தாடும் அம்பகஹமுல வற்றவும் ; மேற்கு-எஸ். அப்புவாவும் மற்றவர்களும் உரித்தாடும் அமப கஹமுலவற்ற, ஏ. ஏ. புஞ்சிமகாத்மயா உரித்தாடும் கல்லெனகஹவற்றவும், ஏ. ஏ. ஆறேலிசும் இன்னொருத்தரும் உரித்தாடும் பலெவற்றவுமே.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஷூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் காட்டு நிரோதைப் பூரணமாக்குவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

காட்டளவை 2 ம் சப்பிளிமென்ற், பிரதமபடத்து இல. 49. குறிச்சி—உவக.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | டுல்கெண்டகண்ட அல்லது மினுவான்வில | தோட்டம், 50 வருஷஞ்சென்ற 10 தென்னையும், 15 வருஷஞ்சென்ற 3 தென்னையும், 2 வருஷஞ்சென்ற 2 தென்னங்கன்றும், 20 வருஷஞ்சென்ற 57 கமுகுவும், 4 வருஷஞ்சென்ற 10 கமுகுவும், 6 வருஷஞ்சென்ற 4 றப்பர் மரமும், 12 வருஷஞ்சென்ற 5 பலாவும், 6 வருஷஞ்சென்ற 4 பலாவும், 20 வருஷஞ்சென்ற 1 மாவும், 3 வருஷஞ்சென்ற 1 ஈரப்பலாவும், 5 வருஷஞ்சென்ற 10 வாழை அடிகளும், 5 வருஷஞ்சென்ற 1 நம்புட்டான்மரமும், 10 வருஷஞ்சென்ற 1 இம்புல்மரமும், 10 வருஷஞ்சென்ற 1 கஜுமரமும், 2½ அடி துவங்கி 3½ அடி வரை சுற்றுள்ள 5 பெடிடெல்மரமும், 4 அடி சுற்றுள்ள 1 மில்லமரமும், 1 அடி சுற்றுள்ள 2 மில்லமரமும், ஓலையால் வேய்ந்த 1 மண் சுவர் வீடுமுள்ளது | கலுககுருகே யெலிசா, மேற்படி டேவித்தா, மேற்படி பபனிசா, மேற்படி யெசா, மேற்படி பொடினு, எல்லோரும் உவக | 1 1 7·3 |
| 2 | மினுவான்விலகும்புற | நெல்வயல் (கைவிடப்பட்டது) .. .. .. | ஷெ .. | 1 3 33 |
| 3 | மினுவான்வில .. | சேனை, 20 வருஷஞ்சென்ற 230 கமுகுவும், 4 வருஷஞ்சென்ற 28 கமுகுவும், 15 வருஷஞ்சென்ற 1 தென்னையும், 6 வருஷஞ்சென்ற 2 தென்னையும், 12 வருஷஞ்சென்ற 4 மாவும், 6 வருஷஞ்சென்ற 2 பலாவும், 5 வருஷஞ்சென்ற 2 கஜுமரமும், 20 வருஷஞ்சென்ற 1 மூங்கில்பத்தையும், 1 அடி சுற்றுள்ள 2 பெடிடெல்மரமுமுள்ளது | ஷெ .. | 2 1 26·2 |
| 4 | டுல்கென்கண்ட .. | சேனை .. .. .. .. | ஷெ .. | 0 1 20·5 |
| 5 | ஷெ .. | சேனை, 6 வருஷஞ்சென்ற 1 பலாவும், 20 வருஷஞ்சென்ற 1 கமுகுவும், 2½ அடி சுற்றுள்ள 1 பெடிடெல்மரமும், 1½ அடி துவங்கி 3 அடிவரை சுற்றுள்ள 3 கால்மரமுமுள்ளது | ஷெ .. | 0 3 26·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஷூ (ஆகஸ்ற்) ஆவணி மாசம் 6 ந் தேதியிலன்று 10 மணிக்கு உவக சுகாதார கந்தோர் சந்தையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காயத் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1938 ம் ஷூ (ஜூன்) ஆனிமீ 24 ந் உ.

ஆர். மொறிபெரி,
மேலதிக உதவி அரசாட்சி ஏஜன்ட்.

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் இன்டிக்கடே காட்டு றிசேர்வுக்குப் போகும் பாதைக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 835. குறிச்சி—வக.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 2 | அலுபோகஹவத்த .. | தென்னங்காணி, 25 வருஷஞ்சென்ற 10 தென்னையும், 4 கமுகுவும், 20 வருஷஞ்சென்ற 1 கஜுமரமும், 15 வருஷஞ்சென்ற 4 றப்பர்மரமுமுள்ளது | டீ. பீ. விஜயசிங்க, டீ. ஏ. விஜயசிங்க, இரு பேரும் உடகம, வீ. பீ. டீ. சாள்ஸ் தர்ம ரத்தின ஆராச்சி, வக | 0 1 3·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆடு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனாதிகார ஆட்சிமந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஆடு (ஆகஸ்ட்) ஆவணி மாசம் 6 ந் தேதியிலன்று 10 மணிக்கு உவக சுகாதாரக கந்தோரிர் சந்தையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் அவிவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1938 ம் ஆடு (ஜூன்) ஆனிமீ 24 ந் உ.

ஆர். மொனிபெனி,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பையாகலையில் கிராம கோடு ஒன்று கட்டும்படியாக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 857. குறிச்சி—மஹாபையாகலை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கோங்கஹவத்தை .. | 35 வருஷஞ்சென்ற 9 தென்னைமரங்களும், மேசன்வேலைசெய்த சுவரின் ஒரு பாகமும் அடங்கிய தோட்டம் | டபிள்யு. டொன் அந்திரிஸ், மஹா பையாகலை | 0 0 8·45 |
| 2 | பண்டிதயாவத்தை .. | 4 மேசன்வேலைசெய்த கேற் தூண்களும், மேசன்வேலைசெய்த சுவர் ஒன்றும், 1 முதல் 3 வருஷஞ்சென்ற 4 தென்னைமரங்களும் அடங்கிய தோட்டம் | மஹா பையாகலையில் இருக்கும் ஜோன் பிரான்சிஸ் | 0 0 7·95 |
| 3 | போகஹவத்தை அல்லது பொடிக்காறயாவத்தை | 15 முதல் 20 வருஷஞ்சென்ற 2 பாக்குமரங்களும், 35 வருஷஞ்சென்ற 12 தென்னைமரங்களும் அடங்கிய தோட்டம் | ஷை .. | 0 0 10·85 |
| 4 | ஷை .. | 25 முதல் 35 வர்ஷஞ்சென்ற 44 தென்னைமரங்களும், 15 முதல் 20 வருஷஞ்சென் 6 பாக்குமரங்களும், 25 வருஷஞ்சென்ற 1 பிலாமரமும், 1 பிலிங்மரமும் அடங்கிய தோட்டம் | ஷை .. | 0 1 18·31 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆடு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஆடு (ஜூலை) ஆடி மாசம் 28 ந் தேதியிலன்று 10 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1938 ம் ஆடு (ஜூன்) ஆனிமீ 27 ந் உ.

ஜே. என். ஆறுமுகம்,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மண்டூர் அப்போத்திக்கரியின் வங்களாவுக்கு ஓர் மலக்கூடம் கட்டுவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 300. குறிச்சி—மண்டூர் 2 ம் குறிச்சி.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பிலாவடிவளவு .. | 4 தென்னைமரங்களடங்கிய ஓர் வளவு | (1) சரவணை பாலாத்தை மண்டூர் 2 ம் குறிச்சி, (2) சரவணை பொன்னம்பலம், நம்பலவத்தை, (3) கண்ணப்பர் குமாரு, (4) குமாரு வள்ளிமுத்து, (5) குமாரு கன்னிச்சி, (6) குமாரு செல்லையா, (7) குமாரு சின்னப்பிள்ளை, (8) குமாரு நாகரெத்தினம், இவர்கள் மண்டூர் 3 ம் குறிச்சியில் குடியிருப்பவர்கள் | 0 0 5·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆடு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரம்பண்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஆடு (ஜூலை) ஆடி மாசம் 28 ந் தேதியிலன்று பிற்பகல் 4 மணிக்கு பட்டிருப்பு கிராமக் கோட்டு வீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புக் கச்சேரி,
1938 ம் ஆடு (ஜூன்) ஆனிமீ 24 ந் உ.

டபிள்யு. ஜே. ஏ. வென்லெங்கன்பேர்க்,
உதவி அரசாட்சி ஏசண்டு, மட்டக்களப்பு.

---

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புத்தளம் தண்ணீர் கொடுப்பதை திருத்துவதற்கும் பெருப்பிப்பதற்கும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 552. குறிச்சி—சேனைக்குடியிருப்பு.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | சேனைகுடியிருப்புத் தோட்டம், காணிவரி நம்பர் நம்பர் 17 F3 | தென்னந்தோட்டம் .. | சேனைக்குடியிருப்பிலிருக்கும் டி. முத்தையா | 0 1 19·3 |
| 2 | சேனைகுடியிருப்புத் தோட்டம், காணிவரி நம்பர் 64–69 ல் பாகங்கள் | ஷை .. | புத்தளம் எஸ். அசனா மரைக்கார் .. | 0 0 18·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியின் ஆட்சிப்படுத்திக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவர்களுடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ௵ (ஆகஸ்து) ஆவணி மாசம் 23 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு புத்தளம் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

புத்தளம் கச்சேரி,
1938 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 21 ந் உ.

ஜே. ஊற்,
உதவி அரசாட்சி ஏசன்ட்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பயதரானவைப் பிரபு வெடிவைக்கப் பழகும் காணியின் எல்லைகள் என்றும் பரிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகள், அதாவது :—

கடைசிப்படத்து இல. 193, அட்டவணை 2. குறிச்சி—கரந்தவெல.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விஸ்தீர்ணம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 230 | எல்லேகும்புற .. | வயற்காணி .. | ஊறபுத்தனையிலிருக்கும் மாணிக்கபடாறுகே ககதபால, மேற்படி அமரபால, மேற்படி ஐயசிங்க, அலங்கமுவின தெனுவலவிலிருக்கும் மாணிக்கபடாறுகே லீலாவதி, மேற்படி சுமனவதி, மேற்படி நன்டாவதி | 2 1 13 |
| 230½ | டிை .. | டிை .. | டிை .. .. .. | 0 0 16 |
| 383 | கப்புஹிக்கருவேகும்புற அல்லது நறியெல்லேகும்புற | டிை .. | கஹத்தவெல குணரத்தின தேரோ .. .. .. | 1 0 36 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிப்படுத்திக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவர்களுடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ௵ (ஆகஸ்து) ஆவணி மாசம் 17 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு பண்டாரவளைப் பொலிஸ் கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1938 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 28 ந் உ.

என். ஜே. டிக்ரன்,
ஊவா அரசாட்சி ஏசன்ட்.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

1938 ம் ஆண்டு ஐப்பசிமீ 1 ந் திகதி துவக்கம் 1939 ம் ஆண்டு புரட்டாதி மாசம் 30 ந் திகதி வரையிலுள்ள ஒரு வருட காலத்துக்கு இதனடியிற் காட்டப்படும் புத்தளம் டிஸ்திறிக்கிலுள்ள ஆயக்குத்தகைகளை வாங்குவதற்கு விரும்புவோர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை ஒழுங்காக கையொப்பமும் திகதியுமிட்டு புத்தளம் உதவி ஏசன்டுத்துரை யவர்களுக்கு 1938 ம் ஆண்டு ஆடிமீ 14 ந் திகதி, முற்பகல் 11.30 மணிக்குமுன் ஒவ்வோர் கேள்விக்காரரும் முகாமுகமாய்க் கொடுக்கவேண்டியது. மேற்குறித்த நேரத்தின்பின் கொடுக்கப்படும் அல்லது தவால்மார்க்கமாக அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படமாட்டா.

கேள்விப்பத்திர மனுப்பப்படும் உறைகள் ஒவ்வொன்றிலும் மேற்பக்கத்து இடது மூலையில் " ஆயக்குத்தகை கேள்விப்பத்திரம் " என்று எழுத வேண்டியது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் கேள்வி ஏற்றவுடன் கேள்வித் தொகையின் பத்திலொன்று முற்பணமாகக் கட்டவேண்டியது. பின்னர் உத்தம தேசாதிபதியவர்கள் மேற்படி கேள்வியை அங்கீகாரஞ்செய்து அவ்வங்கீகாரம் கேள்விக்காரருக்கு அறிவிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் கேள்வித்தொகையின் அரைவாசிக்குப் பெறுமதியான ஆதனம் அல்லது கேள்வித்தொகையின் மூன்றி லொரு பங்கை ரொக்கமாகப் பிணைக்கட்ட வேண்டியது.

முடிக்குரிய பிரக்கிராசியார் கேள்விக்காரர் பிணைகொடுக்கு மாதனங்களி னுறுதிகளைப் பரிசோதனைசெய்யவும் பிணையுறுதியை எழுதவும் சரியெனத் தீர்ப்புச்சொல்லவும் வேண்டிய செலவுகளுக்காகவும் 1919 ம் ஆண்டு 10 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி தேவையான முத்திரைச் செலவுக்காகவும் தேவையான பணத்தை கேள்விக்காரரே கட்டவேண்டியது.

பிணைகொடுக்கு முறுதிகளுடன் அவ்வுறுதிகளிற் சொல்லப்பட்ட ஆதனங்களின் பெயரால் ஒரு பிசகுகளுமில்லை யென்று பூமி பதிவுகந்தோர் தலைவரிடமிருந்து ஓர் அறிக்கைப்பத்திரமு மிணைக்கப்படவேண்டும். இப்பத்திரங்களின் செலவுக ளெல்லாம் பிணை கொடுப்பவர்களே பொறுக்க வேண்டும்.

கேள்விகளின் எல்லாவற்றையும் அல்லது சிலவற்றை ஏற்றுக்கொள்ளாது விடவும் அல்லது கேள்விகளின் சில பாகங்களையே ஏற்றுக்கொள்ளுந் தத்துவம் உதவி ஏசன்டுத்துரை யவர்களுக்குண்டு.

இன்னும் விபரங்கள் தேவையாயின் புத்தளம் கச்சேரியிற் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

துறை.

1. புத்தளம் எத்தாலே.

ஜே. ஊற்,
புத்தளம் உதவி ஏசன்டுத்துரை அவர்கள்.

புத்தளம் கச்சேரி,
1938 ம் ௵ ஆனிமீ 28 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.